# MAKAL KURAL

| | | |
|---|---|---|
| Date | : | 26-Jul-08 |
| Event | : | Press conference to announce the launch of Artha Money and Products offered |
| Location | : | Chennai |



## இந்திய வாடிக்கையாளர்களுக்கு நிதி வசதிகளை வழங்கும் 'ஆர்தாமணி'

சென்னை, ஜூலை 26-

இந்திய வாடிக்கையாளர்களுக்கு நிதி தொடர்பான அனைத்து சேவைகளும் 'ஆர்தா மணி' நிறுவனம் வழங்குகிறது என்று ஆர்தா மணி' நிர்வாக இயக்குனர் சுரேஷ் ரங்கராஜன் தெரிவித்தார்.

இதுகுறித்து சுரேஷ் ரங்கராஜன் மேலும் கூறியதாவது:-

பரஸ்பர நிதி, சமபங்கு முதலீடுகள், அன்னிய செலாவணி போன்ற சேவைகளை ஒரே குடையின் கீழ் அனைத்து நிதி தொடர்பான சேவைகளை அளிப்பதன் மூலம் தனியார் நிதி துறையில் சில்லறை வர்த்தகத்தில் 'ஆர்தாமணி' ஒரு புரட்சியை ஏற்படுத்தும்.

'ஆர்தாமணி' கடந்த 2008 ஜனவரி மாதம் ரூ.200 கோடி முதலீட்டில் மும்பையை தலைமையகமாக கொண்டு தொடங்கப்பட்டது. தற்போது சென்னை, பெங்களூர், ஐதராபாத், டெல்லி ஆகிய இடங்களில் கிளைகளை கொண்டுள் ளது. சென்னையில் அடையாறு, அண்ணாநகர், மவுண்ட் ரோடு, குரோம்பேட்டை, தி.நகர் ஆகிய இடங்களில் அலுவலகங்களை கொண்டு உள்ளது. 'ஆர்தாமணி'யில் கணக்குகளை துவக்க எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை. வருடத்திற்கு ஒரு லட்சம் நபர்களை 'ஆர்தாமணி' வாடிக்கையாளர்களாக உருவாக்க முயற்சி செய்து வருகிறது. தற்போது ' சென்னையில் ஆயிரம் வாடிக்கை யாளர்களை கொண்டுள்ளது.

ஆர்த்தாமணி சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட பல்வேறு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு உள்ளது. ஆர்த்தாமணியின் கிரெடிட் கார்டு பெறுவதற்கு ரூ.500 செலுத்தி, பெற்றுக் கொள்ளலாம். இந்த கார்டில் ரூ.10 ஆயிரம் மதிப்பு வரை பொருட்கள் வாங்கலாம். வருகிற ஆகஸ்ட் மாதம் 25-ந் தேதிக்குள் 'ஆர்தாமணி'யில் கணக்கு தொடங்குபவர்களுக்கு வெள்ளி நாணயம் அன்பளிப்பாக வழங்கப் படுகிறது.

இந்த வெள்ளி நாணயம் பெற்று கணக்கு தொடங்கியவர்களுக்கு இடையே ஒரு சிறப்பு போட்டி நடத்தப் பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு ஒரு சவரன் தங்க நாணயம் பரிசாக வழங்கப் பட உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.